## SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST - 2008

## PSC 3.12 – POLITICAL IDEOLOGIES

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அரசியல் கருத்தியல்கள் என்ற கற்கைநெறியினூடாக நீர் விளங்கிக் கொள்வது என்ன? அரசியல் கருத்தியல்களின் தோற்றம் மற்றும் அரசியல் முறைமை (Political system) களை உருவாக்குவதிலும் இயக்குவதிலும் அவை வகிக்கும் பங்கு குறித்து விளக்குக. (20 புள்ளிகள்)

02. (அ) பெண்ணிலைவாதக் கருத்தியலை விளக்கி அதன் வகைப்பாடுகள் பற்றி சுருக்கமாக ஆராய்க. (10 புள்ளிகள்)

    (அ) நவீன பெண்ணிலைவாதத்தின் போக்கினை விமர்சிக்குக. (10 புள்ளிகள்)

03. வர்க்கப் பிரிவினையற்ற சமூகம் ஒன்றை எதிர்காலத்தில் அமைப்பது தொடர்பான கார்ல் மார்க்சின் அரசியல் கோட்பாட்டினை தற்கால சமூக அமைப்புக்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி பரிசீலிக்குக. (20 புள்ளிகள்)

04. நவீன தாராண்மைவாதத்தின் அடிப்படைகளை விளக்கி தற்கால உலகில் தாராண்மைவாதம் வகிக்கும் முக்கியத்துவத்தினை ஆராய்க. (20 புள்ளிகள்)

05. சூழலியவாதம் (Environmentalism) ஓர் அரசியல் கருத்தியலாக அண்மைக் காலத்தில் தோன்றி, பசுமை அரசியலின் (Green politics) செயற்பாட்டை உலக நாடுகளில் தூண்டி விட்டிருக்கின்றது.” நுணுக்கமாகப் பரிசீலிக்குக. (20 புள்ளிகள்)

06. ஒன்றில்

    தேசியவாதத்தின் (Nationalism) தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் தற்கால நிலை குறித்துக் கட்டுரை ஒன்று வரைக. (20 புள்ளிகள்)

    அல்லது

    பயன்கருதுவாதக் (Utilization) கருத்துக்களை தற்கால சமூகநல அரசுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க. (20 புள்ளிகள்)

07. பாசிசத்தின் பிரதான கருத்துக்களை சுட்டிக்காட்டி தற்கால அரசியற் செயற்பாடுகளில் அது செல்வாக்குச் செலுத்தும் வித்தினை விமர்சன ரீதியாக நோக்குக. (20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு (02) மாத்திரம் சிறுகுறிப்புக்கள் எழுதுக.

    (அ) ஜனநாயகம்
    (ஆ) பன்மைத்துவ கலாச்சாரவாதம் (Multi Culturalism)
    (இ) மதஅடிப்படைவாதம்
    (ஈ) ஜனநாயக சோசலிசம் (Democratic Socialism)

(2 x 10 = 20 புள்ளிகள்)

***